# தமிழ் முதல் தாள்

## பத்தாம் வகுப்பு          பகுதி – அ

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக**

1. பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர் **பாவாணர்**

2. இன்றைய மதுரையில் **மூன்றாம்** தமிழ்ச் சங்கம் இருந்தது

3. அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் போது நம் சமுதாயத்தில் தலைகீழ் புரட்சி ஏற்படும் என்றவர் **பெரியார்**

4. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று **சொத்துரிமை** இல்லாமை

5. 1918இல் மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் **பொருளியல்** பேராசிரியராகப் பணியாற்றினார்.

6. அம்பேத்காருக்கு இந்திய அரசு வழங்கிய விருது **பாரத ரத்னா**

7. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை **பேச்சுக்கலை**

8. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர் **பேறறிஞர் அண்ணா**

9. பண்ணொடு தமிழொப்பாய் எனத் தொடங்கும் பாடல் இடம் பெறும் நூல் **தேவாரம்**

10. உலகம் என்ற தமிழ்ச் சொல் **உலவு** என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது.

11. தமிழர்கள் நிலத்தை **ஐந்து** வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.

12. காந்தியடிகள் **சிரவணபிதுர்பத்தி** நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்.

13. பகைவனிடமும் அன்பு காட்டு எனக் கூறிய நூல் **பைபிள்**

14. அறநெறியாகப் போற்றப்பட வேண்டியவை **அன்பு, அருள்**

15. ‘உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்’ எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் **பெரியபுராணம்**

16. வள்ளலாரின் இயற்பெயர் **இராமலிங்கர்**

17. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி **பன்னிரெண்டாம் வகுப்பு**

18. விரல்கள் பத்தும் மூலதனம் என்னும் பாடலின் ஆசிரியர் **தாராபாரதி**

19. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் **மணக்கொடை**

20. சரிந்த குடலைப் புத்தத் துறவியர் சரி செய்த செய்தியை எடுத்துரைக்கும் நூல் **மணிமேகலை**

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. தமிழர் மனித வாழ்வை **அகம் புறம்** எனப் பிரித்தனர்.

2. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி **தமிழ்**.

3. தமிழ் மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் **மாக்சுமுல்லர்** ஆவார்.

4. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள **பெருநோய்** ஒன்று உண்டு.

5. பெரியார் சமூக **முரண்களை** எதிர்த்தவர்; மூடக்கருத்துகளை **முட்டறுத்தவர்**.

6. வெறும் பேச்சுக்கும் **மேடைப்** பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.

7. பேச்சு முடிவில் **சுருக்கத்தைக்** கூறி கருத்தை நிலை நாட்டி முடிக்க வேண்டும்.

8. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்புக் கலையைக் கற்றுத் தருபவரையும் **இயக்குநர்** என அழைப்பர்.

9. படப்பிடிப்புக் கருவியை **நகர்த்தும் வண்டியில்** பொருத்துவதும் உண்டு.

10. இயங்கும் படங்களைப் பார்ப்பதற்கு **வேடிக்கையாக** இருக்கும்.

11. இலெமூரியாவை **மனித நாகரிகத் தொட்டில்** என்பர்.

12. தனக்குவமையில்லா ஒரு **தனிஇனம்** தமிழ் இனம்.

13. அனைத்தையும் இழப்பினும் உண்மையை இழக்கிலேன் எனக் கூறியவர் **அரிச்சந்திரன்.**

14. திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர் **தால்சுதாய்**.

15. இராமலிங்கர் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம் **வடலூர்.**

16. இராமலிங்கர் தமிழ் மொழியை **இறவாத நிலை** தரும் என்று கருதினார்.

17. சங்க காலத்தில் பெண்கள் **கடல்** கடந்து செல்லக் கூடாது.

18. நாள்தோறும் கல்வியில் புதுப்புதுத்துறைகள் உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன.

19. காவலர், இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும், **எழுத்துத்** தேர்வும் உண்டு.

20. **சிலப்பதிகாரம்** முத்தமிழ்க் காப்பியம் என்று அழைக்கப்படுகிறது.

**III. பொருத்துக**

1. **சொல்** — **பொருள்**
   1. விரை – மணம்
   2. கழல் – அணிகலன்
   3. ததும்பி – பெருகி
   4. மெய் – உடல்

2. அறத்துப்பால் – 38 அதிகாரங்கள்
   பொருட்பால் – 70 அதிகாரங்கள்
   இன்பத்துப்பால் – 25 அதிகாரங்கள்

3. **காண்டம்** — **காதைகள்**
   1. புகார்க்காண்டம் – 10 காதைகள்
   2. மதுரைக்காண்டம் – 13 காதைகள்
   3. வஞ்சிக்காண்டம் – 7 காதைகள்

4. **சொல்** — **பொருள்**
   1. இடர் – துன்பம்
   2. நாவாப் – படகு
   3. இறை – தலைவன்
   4. இந்து – நிலவு

5. **சொல்** — **பொருள்**
   1. செறு – வயல்
   2. வித்து – விதை
   3. யாணர் – புதுவருவாய்
   4. வட்டி – பனையோலைப்பெட்டி

6. **சொல்** — **பொருள்**
   1. மேதி – எருமை
   2. சந்தம் – அழகு
   3. கோதில் – குற்றமில்லாத
   4. அங்கணர் – சிவன்

7. **சொல்** — **பொருள்**
   1. கான் – காடு
   2. உழுவை – புலி
   3. மடங்கல் – சிங்கம்
   4. எண்கு – கரடி

8. 1. பண்பு – பாடறிந்து ஒழுகல்
   2. அன்பு – தன்கிளை செறா அமை
   3. அறிவு – பேதையார் சொல் நோன்றல்
   4. செறிவு – கூறியது மறவாமை

9. **சிறப்புப் பெயர்** — **ஆசிரியர்**
   1. புரட்சிக்கவிஞர் – பாரதிதாசன்
   2. தேசியக்கவிஞர் – பாரதியார்
   3. உவமைக்கவிஞர் – சுரதா
   4. குழந்தைக்கவிஞர் – அழ.வள்ளியப்பா

**IV. உரிய சொல்லைத் தேர்ந்தெழுதுக**

1. மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்துன் விரையார் கழற்கு
2. கைதான் நெகிழவிடேன் இதில் நெகிழ என்பது தளர என்னும் பொருளில் வந்தது.
3. இறுவரைக் காணின் கிழக்காம் தலை

**V. உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக**

1. வாழ்தல் (ல்/ழ்) வேண்டின் (ண்/ன்) துரப்ப (ற/ர)
2. தாழ்ந்த (ள்/ழ்) குடையன் தளர்ந்த(ன்/ந்) செல்கோலன் (ள/ல)
3. இருந்த (ன்/ந்) வள்ளலைக்(ல்/ள்) காணவந் (ன/ண) தெய்தினான் (ய்/ளு)
4. இடருற (ர/ற) மறையோரும் (றை/ரை) எரியுறு (ரி/றி) மெழுகாணார் (ழு/ளு)
5. வளம் மருவும் (ல/ள) நிழல்தரும் (ள/ழ) தண்ணீர்ப் (நீ/ணீ) பந்தர் வந்தணைந்தார் (னை/ணை)
6. சந்தமுற (ர/ற) வரைந்ததனை (றை/ரை) எம்மருங்கும் (ரு/று) தாங்கண்டார் (ன்/ண்)
7. அருளொடும் (ளொ/லொ) அன்பொடும் (ண்/ன்)வாராப் பொருளாக்கம் (லா/ளா)
8. உறுபொருளும் (று/ரு) உல்கு (பொருளுந் (ன்/ந்)

**VI. அடி எதுகையை எடுத்தெழுதுக**

1. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
   என்றும் இடும்பை தரும்.

   **அடி எதுகை** – நன்றிக்கு, என்றும்

**2. சீர் எதுகையைச் சுட்டுக**

1. வருக மற்றிவள் தருக ஈங்கென

**சீர் எதுகை** – வருக, தருக

2. நற்றிறம் படராக் கொற்கை வேந்தே

**சீர் எதுகை** – நற்றிறம், கொற்கை

**VII. சீர் மோனைகளைச் சுட்டுக**

1. கன்வனைக் கோறல் கடுங்கோலன்று

**சீர் மோனை** – தள்வனை, தடுங்கோல்

2. யானோ அரசன் யானே கள்வன்

**சீர்மோனை** – யானோ, யானே

3. "இந்துவின் நுதலாளோடு இளவலொ டினி தேறா"

**சீர்மோனை** – இந்துவின், இளவலொடு

4. மன்றலுன்றிய முகம்மதின் மலரடி வணங்கி

**சீர்மோனை** – மன்ற முகம் மதின் மலரடி

**VIII. உவமையைப் பொருளுடன் பொருத்துக**

**1. அழுக்காறு உடையான்கண் ஆக்கம்**

உவமை: அழுக்காறு உடையான்கண் ஆக்கம்

பொருள்: ஒழுக்கம் இலான் கண் உயர்வு

உவம உருபு: போல

விளக்கம்:பொறாமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது; அதுபோல, ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இருக்காது

**2. கொக்கொக்க கூம்பும் பருவத்து**

உவமை : கொக்கொக்க கூம்பும் பருவத்து

பொருள் : குத்தொக்க சீர்த்த இடத்து

உவம உருபு : போல

விளக்கம் : வாய்ப்பற்ற காலத்தில் கொக்கைப் போல அமைதியாகக் காத்திருக்க வேண்டும். உரிய காலம் வாய்த்ததும் கொக்கைப் போல் விரைந்து செயலைச் செய்து முடித்தல் வேண்டும்.

**3. "மட அன்னக் கதியது செல"**

உவமை : இளம் அன்னம் விரைந்து செல்லுதல்

பொருள் : கங்கையாற்றில் குகன் செலுத்தும் நாவாய் செல்லுதல்

உவம உருபு : போல

விளக்கம் : மடங்கி விழும் அலைகளையுடைய கங்கையாற்றில் இளம் அன்னம் விரைந்து செல்வதைப் போல், குகன் செலுத்திய படகு கங்கை ஆற்றில் விரைந்து சென்றது என்பதாம்.

**4. எழிலிரு புயமும் குன்று போலுற வீங்கின**

உவமை : குன்று போலுற வீங்கின

பொருள் : எழிலிரு புயம்

உவம உருபு : போல

பொருத்தம் : காட்டில் உயிரினம் புலிக்கு அஞ்சி வாழும் செய்திகள் அனைத்தையும் முகம்மது நபிகள் கேட்டறிந்தவுடன், அவரது அழகிய இரு தோள்களும் மலைகளைப் போலப் பருத்தன.

**IX. யார் யாரிடம் கூறிய தொடர் இது ?**

1. வென்றி வாளரசே

மனிதன் ஒருவன், முகம்மது நபியிடம் கூறியது.

2. வேறொரு காட்டினிற் புகுக.

முகம்மது நபி, புலியிடம் கூறியது.

**X. விடுபட்ட சீர்களை எழுதுக.**

1. பரிந்தோம்பிக் **காக்க** ஒழுக்கம் **தெரிந்தோம்பித்** தேரினும் **அஃதே** துணை

2. ஊக்கம் உடையான் **ஒடுக்கம்** பொருதகர் தாக்கத்திற்குப் **பேருந்** தகைத்து

3. அறனறிந்து **மூத்த** அறிவுடையார் கேண்மை திறனறிந்து **தேர்ந்து** கொளல்

4. பொருளொன்னும் **பொய்யா விளக்கம்** இருளறுக்கும் எண்ணிய **தேயத்துச் சென்று**

5. உறுபொருளும் **உல்கு** பொருளுந்தன் **ஒன்னார்த்** தெறுபொருளும் வேந்தன் பொருள்

# <u>தமிழ் முதல் தாள்   (செய்யுள்)</u>

**I. உரிய விடையைத் தேர்ந்தெழுக.**

1. திருக்குறளைப் போற்றிப் பாடப்படும் நூல் **<u>திருவள்ளுவமாலை</u>**

2. திருக்குறள் **<u>குறள்</u>** வெண்பாக்களால் ஆன நூலாகும்.

3. இணையில்லா முப்பாலுக்கு இந்நிலத்தே எனப் பாடியவர் **<u>பாரதிதாசன்</u>**

4. ஏலாதி <u>பதினெண்கீழ்க்கணக்கு</u> நூல்களுள் ஒன்று.

5. கணிமேதாவியாரின் காலம் **<u>சங்கம் மருவிய காலம்</u>**.

6. மருந்துப் பொருள்களால் அமையப்பெற்ற இரு நூல்கள் **திரிகடுகம், ஏலாதி**

7. இளங்கோவடிகள் **<u>சேர</u>** நாட்டைச் சேர்ந்தவர்.

8. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர் **<u>பாரதியார்</u>**.

9. குடும்ப விளக்கு **<u>பாரதிதாசன்</u>** படைத்த குறுங்காவியங்களுல் ஒன்று

10. ஆறு காண்டங்களைக் கொண்ட நூல் **<u>கம்பராமாயணம்</u>**.

11. சரசுவதி அந்தாதி **<u>கம்பர்</u>** இயற்றிய நூல்களுள் ஒன்று.

12. கம்பரைப் புரந்தவர் **<u>சடையப்ப வள்ளல்</u>**.

13. ‘‘நல்’’ என்னும் அடைமொழி பெற்ற நூல் **<u>நற்றிணை</u>**.

14. பன்னாடு தந்த மாறன் வழுதி **<u>நற்றிணையைத் தொகுப்பித்தவர்.</u>**

15. நற்றிணை **<u>எட்டுத் தொகை</u>** நூல்களைச் சார்ந்தது.

16. சேக்கிழார் பெருமான் அருளியது **<u>பெரியபுராணம்.</u>**

17. தம் வீட்டில் உள்ள அனைத்துப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயர் சூட்டியவர் **<u>அப்பூதியடிகளார்</u>**

18. பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ எனப்பாடியவர் **<u>மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்</u>**.

19. திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர் **<u>மூத்த அறிவுடையார்</u>**.

20. அரியவற்றுள் எல்லாம் அரிது **<u>பெரியாரைப்</u>** பேணித்தமராக் கொளல்.

21. முதலில்லார்க்கு **<u>ஊதியம்</u>** இல்லை

22. திருநாவுக்கரசர் காலம் **<u>கி.பி.7</u>** ஆம் நூற்றாண்டு.

23. ‘‘நாமார்க்கும் குடியல்லோம் என்னும் பாடல் **<u>பாரதியாரை</u>** ‘‘அச்சமில்லை அச்சமில்லை எனப் பாடத்தூண்டியது.

24. சீறாப்புராணம் **<u>மூன்று</u>** காண்டங்களைக் கொண்டது.

25. ‘‘கேழல்’’ என்பதன் பொருள் **<u>பன்றி</u>**

26. கலித்தொகை **<u>எட்டுத்தொகை</u>** நூல்களுள் ஒன்று.

www.teachertn.blogspot.com

27. நெய்தல் கலியைப் பாடியவர் **<u>நல்லந்துவனார்.</u>**

28. போற்றாரைப் பொறுத்தல் என்பது **<u>பொறை</u>** எனப்படும்.

29. நந்திக் கலம்பகம் **<u>96</u>** வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

30. ''பணை'' என்னும் சொல்லின் பொருள் **<u>மூங்கில்.</u>**

31. பெருமாள் திருமொழியில் **<u>நூற்றைந்து</u>** பாசுரங்கள் உள்ளன.

32. குலசேகராழ்வார் பாடல் **<u>திருவியற்பா</u>** தொகுப்பில் உள்ளது.

**<u>II. கோடிட்ட இடத்தை நிரப்புக.</u>**

1. மாணிக்க வாசகர் பிறந்த ஊர் **<u>திருவாதவூர்.</u>**

2. மாணிக்க வாசகர் பாடல்கள் **<u>எட்டாம் திருமுறையில்</u>** இடம் பெற்றுள்ளன.

3. மாணிக்க வாசகர் கட்டிய கோவில் **<u>திருப் பெருந்துறையில்</u>** உள்ளது.

4. மாணிக்க வாசகர் **<u>அரிமர்த்தன பாண்டிய</u>** மன்னரிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார்.

5. ஜி.யு போப் திருவாசகத்தை **<u>ஆங்கிலத்தில்</u>** மொழி பெயர்த்தார்.

6. திருவாசகத்திற்கு உருகார் **<u>ஒரு வாசகத்திற்கும்</u>** உருகார்.

7. திருக்குறள் **<u>இலத்தீன், கிரேக்கம், ஆங்கிலம்</u>** முதலான உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

8. திருக்குறளில் **<u>133</u>** அதிகாரங்களும் **<u>1330</u>** குறட்பாக்களும் உள்ளன.

9. ஒழுக்கத்தின் எய்துவர் **<u>மேன்மை</u>** இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி

10. இரட்டைக் காப்பியங்கள் என்பன சிலப்பதிகாரமும் **<u>மணிமேகலையும்</u>** ஆகும்.

11. நற்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும் ப**<u>ன்னிரண்டு அடி</u>** பேரெல்லையும் கொண்ட நூல்.

12. ''அரி'' என்னும் சொல்லின் பொருள் **<u>நெற்கதிர்.</u>**

13. போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் **<u>அதிவீரராமபாண்டியன்.</u>**

14. போலிப் புலவர்களின் தலையை வெட்டுபவர் **<u>ஒட்டக்கூத்தர்.</u>**

15. இல்லாரை **<u>எல்லாரும்</u>** எள்ளுவர்.

16. அறனீனும் இன்பமும் ஈனும் **<u>திறனறிந்து</u>** தீதின்றி வந்த பொருள்.

17. திருநாவுக்கரசரின் தமக்கையார் **<u>திலகவதியார்</u>** ஆவார்.

18. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் **<u>தேவாரம்</u>** என அழைக்கப்படுகிறது.

19. சீறாப் புராணத்தை இயற்றியவர் **<u>உமறுப்புலவர்</u>.**

20. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் **<u>அப்துல்காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதி</u>**

www.teachertn.blogspot.com

21. **<u>தார் வேந்தன்</u>** கோல் நோக்கி வாழும் குடி போன்றிருந்தேனே.

22. உலகத் தமிழ்ப பண்பாட்டு இயக்கம் தோன்றக் காரணமானவர் **<u>சாலை இளந்திரையன்.</u>**

23. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் **<u>திருவாய்மொழி</u>** குலசேகரர் பாடியதாகும்.

## <u>III. பொருத்துக</u>

| | | |
|---|---|---|
| 1. ஈஸ்ட்மன் | – | படச்சுருள் |
| 2. எடிசன் | – | ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி |
| 3. எட்வர்டுமைபிரிட்சு | – | இயக்கப்படம் |
| 4. வால்ட் டிஸ்னி | – | கருத்துப்படம் |

| | | |
|---|---|---|
| 1. சத்திய சோதனை | – | காந்தியடிகள் |
| 2. பகவத்கீதை | – | இந்து சமய நூல் |
| 3. திருக்குறள் | – | திருவள்ளுவர் |
| 4. பைபிள் | – | கிறித்துவ சமய நூல் |

| | | |
|---|---|---|
| 1. வினையே ஆடவர்க்குயிர் | – | குறுந்தொகை |
| 2. முந்நீர் வழக்கம் மகடு உவோடில்லை | – | தொல்காப்பியர் |
| 3. உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே | – | திருமூலர் |
| 4. கைத்தொழில் ஒன்றைக்கற்றுக்கொள் | – | நாமக்கல் கவிஞர். |

www.teachertn.blogspot.com

## தமிழ் முதல் தாள் (செய்யுள்)

## பகுதி – ஆ (2 மதிப்பெண்கள்)

## குறுவினாக்கள்

**அ) இயல்: 1**

**1. உயிரினும் ஓம்பப்படுவது எது ? ஏன் ?**

உயிரினும் ஒப்பப்படுவது ஒழுக்கம். ஏனென்றால், ஒழுக்கம் அனைத்துச் சிறப்புகளையும் தரவல்லது.

**2. ஒழுக்கத்தால் எய்துவது எது ? இழுக்கத்தினால் எய்துவது எது ?**

நல்லொழுக்கத்தால் எய்துவது உயர்வு; இழுக்கத்தினால் எய்துவது பெரும்பழி.

**3. நன்றிக்கு வித்தாவது எது ?**

நன்றிக்கு வித்தாவது நல்லொழுக்கம்.

**4. என்றும் இடும்பை தருவது எது ?**

தீயொழுக்கமே என்றும் இடும்பை (துன்பம்) தரும்.

**5. பல கற்றும் கல்லார் அறிவிலார் யார் ?**

உயர்ந்தாரோடு பொருந்தி வாழும் கல்வியைக் கல்லாதவர் எவ்வளவு தான் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவார்.

**6. கூகையையும் காக்கையையும் எடுத்துக்காட்டி வள்ளுவர் கூறுவது யாது ?**

பகற்பொழுதில் தன்னிலும் வலிய கோட்டானைக் காக்கை வென்று விடும். அது போலப் பகையை வெல்லக் கருதும் வேந்தர், காலம் அறிந்து செயல்பட வேண்டும்.

**7. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது ?**

ஊக்கம் உடையவன் காலத்தை எதிர்பார்த்து அடங்கி இருப்பதானது, ஆட்டுக்கடா பகையைத் தாக்குவதற்குப் பின் வாங்கும் தன்மையைப் போன்றது.

**8. செய்வதற்கரிய செயல் செய்வது எப்போது ?**

கிடைத்தற்கு அரிய வாய்ப்புக் கிடைத்த பொழுது அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செய்தற்கரிய செயல்களைச் செய்து விடல் வேண்டும்.

www.teachertn.blogspot.com

**9. காலமறிந்து செயல்படுவது எவ்வாறு ?**

தகுந்த கருவிகளோடு ஏற்ற காலமறிந்து செயல்பட்டால் செய்தற்கரிய செயல்கள் எவையுமில்லை.

**இயல்: 3**

**10. கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றன எவை ? யாருக்குக் கொண்டு சென்றான் ?**

கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றவை தேனும் மீனும் ஆகும். இராமனுக்குக் கொண்டு சென்றான்.

**11. குகன் இலக்குவனிடம் யாது கூறினான் ?**

இலக்குவனை இராமனாகவே கருதிய குகன் தேவனே தங்கள் திருவடிகளை வணங்க வந்தேன். நான் படகோட்டும் வேட்டுவன், நாய் போல் தொண்டு செய்பவன் என்று அடக்கத்துடன் கூறினான்.

**12. குகனின் வேண்டுகோள் யாது ?**

இராமபிரானுக்கு நேர்ந்துள்ள நிலைமையை நோக்கி அவரைப் பிரிந்து தன் ஊருக்குச் செல்ல குகன் மனம் இசையவில்லை. எனவே அவன் தன்னால் இயன்ற தொண்டினை அவருக்குச் செய்து கொண்டு அவரோடு அங்கேயே இருக்கத் தன்னை அனுமதிக்குமாறு குகன் வேண்டுகோள் விடுக்கிறான்.

**13. அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம் – யார் யாரிடம் கூறியது ?**

இராமபிரான், குகனிடம் கூறியது.

**இயல்: 5**

**14. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியதென்ன ?**

திரநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் நீர் வைத்துள்ள தண்ணீர்ப்பந்தலின் முகப்பில் உம் பெயரை எழுதாமல் வேறொருவர் பெயரை எழுதி வைத்துள்ளமைக்கு என்ன காரணம் ? என்று கேட்டார்.

www.teachertn.blogspot.com

**15. நும்பேர் எழுதாதே வேறொருபேர் முன்னெழுத வேண்டிய காரணம் என் கொல்? யார் யாரிடம் கூறியது?**

திருநாகவுக்கரசன், அப்பூதியடிகளிடம் கூறியது.

**16. "இப்போது இங்கு அவன் உதவான்" – யார் யாரிடம் கூறியது?**

அப்பூதியடிகள், திருநாவுக்கரசரிடம் கூறியது.

**இயல்: 7**

**17. வன்மையுள் எல்லாந் தலையாயது எது?**

தம்மைக் காட்டிலும் அறிவில் சிறந்த பெரியோரை உறவினராய் ஏற்று நடத்தலே வலிமைகளுளெல்லாம் சிறந்த வலிமையாகும்.

**18. செற்றார் செயக்கிடந்ததில்லை யாருக்கு?**

அறிவிற் சிறந்த பெரியோரைச் சார்ந்து நடக்கவல்லாருக்குப் பகைவர் செய்யக்கூடிய தீங்கு யாதொன்றும் இல்லை.

**19. நல்லார் தொடர்பு கைவிடல் எத்தன்மைத்து?**

நல்லவரின் நட்பினைக் கைவிடுவது, பலரைப் பகைத்துக் கொள்வதை விடப் பன்மடங்கு தீமை உடையதாகும்.

**20. வேந்தற்குரிய பொருள்கள் எவை?**

அரசுரிமையால் வந்த பொருளும், மக்கள் வரியாகத் தரும் பொருளும், பகைவரை வென்று கொண்ட திறைப் பொருளும் வேந்தற்குரிய (அரசனுக்குரிய) பொருள்களாகும்.

**21. தேவாரம் – பொருள் தருக.**

தேவாரம் – தே + வாரம் – தெய்வத்தைப் பற்றிய இன்னிசைப் பாடல்; தே – தெய்வம், வாரம் – இசைப்பாடல், தே+ஆரம் எனப் பிரித்துத் தெய்வத்திற்கு அணியும் பூமாலை போன்ற பாமாலை என்றும் கூறுவர்.

**22. சிவபெருமான் எத்தன்மையன்?**

சிவபெருமான் எவருக்கும் அடிமையாகாத தன்மையன்; ஒரு காதினில் நல்ல சங்கினாலான வெண்மையான குண்டலத்தை அணிந்தவன்.

www.teachertn.blogspot.com

**இயல்: 9**

**23. ஆற்றுதல் என்பது யாது ?**

ஆற்றுதல் என்பது வருந்தி வந்தோர்க்கு உதவுதல்.

**24. பண்பு எனப்படுவது யாது ?**

பண்பு எனப்படுவது உலக நிலை அறிந்து நடத்தலாகும்.

**25. அறிவு எனப்படுவது யாது ?**

அறிவு என்று சொல்லப்படுவது, அறிவற்றவர் கூறும் சொற்களைப் பொறுத்துக் கொள்ளுதலாகும்.

**26. கலம்பக உறுப்புகள் நான்களை எழுதுக.**

அம்மானை, குறம், மறம், தவம் ஆகியன கலம்பக உறுப்புகளுள் நான்காகும்.

**27. நந்திவர்மன் வீரம் எத்தகையது ?**

தாமரை மலர் போன்ற நந்திவர்மனின் திருவடிகளைப் பணிந்து திறை செலுத்தாது, அவனை எதிர்த்த அறிவற்ற மன்னர் போரில் தம் உயிரை இழந்து, தேவர் உலகத்தை ஆள்வர் என்று நந்திவர்மன் வீரம் சிறப்பித்துக் கூறப்பட்டது.

**28. நந்திக் கலம்பகம் யார் மீது பாடப்பெற்றது ?**

நந்திக்கலம்பகம் பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன் மீது பாடப்பட்டது.

**29. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன ?**

ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பிற்கு ‘‘நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்’’ என்பது பெயர்.

**30. குலசேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர் ?**

குலசேகரர், வடமொழி, தென்மொழி ஆகிய இரண்டிலும் வல்லவர்.

www.teachertn.blogspot.com

**இயல்: 1**

**30. பழியிலா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை ?**

1. பிறரிடம் பணிவுடையவனாய் இருத்தல், ஒழுக்க நெறியில் நடத்தல்.
2. சான்றோர் அறிவுரையை விரும்பி ஏற்றல், நுட்பமான நூல்களை ஓதி உணர்ந்து அவற்றின்படி நடத்தல் ஆகியவையே பழியிலா மன்னனாய் வாழ்பவனின் பண்புகள் என கணிமேதாவியார் குறிப்பிடுகிறார்.

**பகுதி – ஆ**

**குறுவினா – உரை நடை (2 மதிப்பெண்)**

**இயல் – 1**

**1. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை ?**

மூவாயிரம்

**2. தமிழ் மொழி குறித்து டாக்டர் எமினோ கூறுவது யாது ?**

மனித உணர்வுகளை எண்ணிய எண்ணியவாறு வெளிப்படுத்தவல்லது தமிழ்மொழி என்பார் முனைவர் எமினோ.

**3. தமிழ் மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.**

தமிழ்மொழி இறவா இலக்கிய, இலக்கண வளம் கொண்டு தனக்கெனத் தனிநோக்கும் போக்கும் அமைத்துக் கொண்ட மொழி.

**இயல் – 5**

**4. மொழி மாற்றம் என்றால் என்ன ?**

ஒரு மொழிப்படத்தை மற்ற மொழியில் மாற்றி அமைக்கும் முறைக்கு, மொழி மாற்றம் என்று பெயர்.

**5. கல்விப் படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை ?**

கல்விப் படங்களின் வாயிலாகப் பல்வகை விலங்குகளின் வாழ்க்கை, பன்னாட்டு மக்களின் வாழ்க்கை, நேரில் காண முடியாத பல இடங்கள் ஆகியவற்றைப் பற்றிக் கொண்டு தெரிந்து கொள்ள முடிகிறது.

www.teachertn.blogspot.com

6. செய்திப் படங்கள் மூலமாக நாம் அறிவன யாவை ?

உலகில் பல்வேறு பகுதிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளையே படமாக்கிக் காட்டுவது செய்திப் படமாகும்.

**இயல் – 6**

7. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை ?

1. குமரிமலை 2. ப ஃறுளி ஆறு

8. ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை ?

1. பட்டினப்பாலை 2. மதுரைக்காஞ்சி

**இயல் – 7**

9. ஞாலம் – பெயர்க்காரணம் கூறுக

ஞாலம் என்னும் தமிழ்ச் சொல் ஞால் என்னும் சொல்லடியாகத் தோன்றியது என்பவர் ஞால் என்பதற்குத் தொங்குதல் என்பது பொருள். எவ்விதப் பற்றுக் கோடுமின்றி அண்ட வெளியில் உலகம் தொங்கிக் கொண்டிருப்பதை இஃது உணர்த்துகிறது.

10. நோய் வருவதற்கான காரணம் பற்றித் திருவள்ளுவர் கூறுவதென்ன ?

உடலில் வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்றனுள் ஏதேனும் ஒன்றின் அளவு குறைந்தால் நோய் வரும்.

**இயல் – 8**

11. அமெரிக்க இதழாசிரியர் காந்தியடிகள் பற்றிக் கூறியது யாது ?

“உலகில் இன்று காந்தியடிகள் இல்லை. ஆனால், அவர் விட்டுச் சென்ற காந்தியக் கொள்கைகள் இன்றும் உலகை வழி நடத்திச் செல்கின்றன” என்று கூறினார்.

12. காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது ?

“தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை; தீமை செய்தவர்க்கும் நன்மையே செய், உண்மைப் பொருண்மை உண்டு” என்ற அப்பாடல் இன்னா செய்யாமை என்னும் கருத்தை அவருள் விதைத்தது.



www.teachertn.blogspot.com

13. இயேசுவின் மலைப்பொழிவு நூலைப் படித்துக் காந்தியடிகள் உணர்ந்தது என்ன ?

''தீயவனை எதிர்க்காதே; அவனிடமுள்ள தீமையை எதிர்த்து நில்; பகைவனிடமும் அன்பு பாராட்டு'' என்பன ஆகும்.

14. காந்தியடிகளுக்கு இளம் பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர்பண்புகள் யாவை ?

அன்பு, உண்மை, உறுதி, இன்னா செய்யாமை என்பனவாகும்.

15. காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை ?

1. கதர் இயக்கம் 2. மதுவிலக்கு 3. தீண்டாமை ஒழிப்பு

16. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார் ?

''கோடானு கோடி மக்கள் உண்ணக் கஞ்சியும் உடுக்கக் கந்தையும் இல்லாமல் தவிக்கும் போது செல்வர்கள் பகட்டாக வாழ்வது பாவமல்லவா ? என்கிறார்.

17. எவற்றை அறநெறியாகப் போற்ற வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார் ?

எளிமையும், சிக்கனமும் அறநெறியாகப் போற்றப்பட வேண்டும் என்றார்.

18. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது ?

இந்தியாவின் வாழ்வு என்பது இலட்சக்கணக்கான கிராமங்களின் வாழ்வு.

இயல் – 9

19. இராமலிங்கர் எங்கு, எப்போது பிறந்தார் ?

மருதூர், 05.10.1823

20. வள்ளலாரின் முழக்கம் யாது ?

''அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங்கருணை''

21. சத்திய தரும சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது ?

சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார்.

www.teachertn.blogspot.com

இயல் – 10

22. ஒவ்வொருவரும் குறைந்தது எக் கல்வித் தகுதியினைப் பெறுதல் வேண்டும் ?

மேனிலைக் கல்வி தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

23. வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தரும் அமுத சுரபியாக விளங்குபவை யாவை ?

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் முதலியன.

24. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில் நுட்பத் துறைகள் யாவை ?

1. உயிரி தொழில் நுட்பம்
2. நுண்ணியல் தொழில் நுட்பம்

25. பட்டப்படிப்புகளில் எவையேனும் நான்கினை எழுதுக.

1. பி.லிட்., (B.Lit) – தமிழ்
2. பி.ஏ., (B.A) – ஆங்கிலம்
3. பி.எஸ்.சி., (B.Sc.,) – கணிதம்
4. பி.காம்., (B.Com.,) – வணிகவியல்

26. இடைநிலையாசிரியர் பயிற்சி குறித்து எழுதுக.

மேனிலைக்கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள், இடைநிலையாசிரியர், கல்விப் பயிற்சியில் இரண்டாண்டுகள் படித்துத் தேர்ச்சி பெற்றால் இடைநிலையாசிரியராகப் பணியில் சேரலாம்.

## <u>செய்யுள்</u>

## <u>சிறுவினா விடை (4 மதிப்பெண்கள்)</u>

இயல் – 2

1. வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான் ?

1. கொற்கை என்னும் துறைமுகத்தை உடைய பாண்டியனே வாழ்வாயாக.
2. தென் பொதிகை மலைக்குத் தலைவனே, வாழ்க ! செழியனே, வாழ்க !
3. தமிழ்நாட்டின் தென்பகுதித் தலைவனே, வாழ்க !
4. பழிச்சொற்கள் சேராத பஞ்சவனே, வாழ்க.

www.teachertn.blogspot.com

2. கண்ணகி குறித்து வாயிற்காவலன் கூறியவற்றை எழுது.

1. பிடர்த் தலையின் மீது ஏறிய வெற்றி தரும் வேலைக் கையில் ஏந்திய கொற்றவை அல்லள்.
2. கன்னியர் எழுவருள் இளையவளாகிய பிடாரியும் அல்லள்.
3. இறைவனை நடனமாடச் செய்த பத்ரகாளியும் அல்லள்.
4. காடு வாழ்காளியும் அல்லள்.
5. தாருகன் மார்பைப் பிளந்த துர்க்கையும் அல்லள்.
6. சினம் கொண்டவளாய், சிலம்பு ஏந்தியவளாய், கணவனை இழந்த ஒருத்தி அரண்மனை வாயிலில் நிற்கின்றாள்.

என வாயிற்காவலன் கண்ணகி குறித்துக் கூறினான்.

3. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை ?

1. தேவர்களும் வியப்படையுமாறு தன்னிடம் அடைக்கலமாக வந்த புறாவின் துன்பத்தைப் போக்கியவன் சோழன் சிபிச் சக்கரவர்த்தி.
2. தன் அரண்மனை வாயிலில் ஒலித்த ஆராய்ச்சி மணி ஓசையைக் கேட்டு, பசுவின் துயரை அறிந்து, அதற்குக் காரணமான தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக்கொன்று நீதி காத்தவன் மனு நீதிச் சோழன்.

4. கண்ணகிக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி யாது ?

‘‘உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி நான்’’ எனக் கண்ணகி கூறினாள். அதைக் கேட்ட பாண்டிய மன்னன், ‘‘கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று, அதுவே அரசநீதி’’ என்று மறுமொழி கூறினான்.

5. தமிழ்மொழி வளர்ச்சியடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை ?

1. எளிய நடையில் தமிழ் நூல்களை எழுத வேண்டும்.
2. புதிய இலக்கண நூல் படைக்க வேண்டும்.
3. உலகின் புதிய சிந்தனைகளைப் படங்களுடன் விளக்கும் சுவடிகள் உருவாக்க வேண்டும்.
4. பிறதுறை நூல்களைப் பிறர் துணையின்றிப் படித்தறியும் வகையில் நூல்கள் வர வேண்டும்.
5. இலவச நூலகங்கள் ஊர்தோறும் அமைத்தல் வேண்டும்.

www.teachertn.blogspot.com

**6.** செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்யப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை ?

1. எளிய நடையில் தமிழ் நூல்களை எழுத வேண்டும்.
2. காலத்திற்கேற்ற புதிய இலக்கண நூல் படைக்க வேண்டும்.
3. உலகின் புதிய கண்டுபிடிப்புகளால் எழும் புதிய சிந்தனைகளைப் புரிந்து கொள்ளும் வண்ணம் படங்களுடன் விளக்கும் நூங்களை உருவாக்க வேண்டும்.

இவையே செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்யப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் ஆகும்.

**7.** தமிழர் எதற்கு நாண வேண்டும் ?

வறுமை காரணமாகத் தமிழன் ஒருவன் கல்வியறிவு பெறவில்லை என்ற நிலை வந்தால் அந்நிலைக்காகத் தமிழர் நாண வேண்டும்.

**இயல் – 3**

**8.** கம்ப இராமாயணம் – சிறு குறிப்பு எழுதுக.

1. இராம + அயனம் = இராமாயணம். இராமனது வரலாறு என்பது பொருள். வடமொழியில் வான்மீகி முனிவர் எழுதிய இராமாயணத்தைத் தழுவிக் கம்பர் தமிழில் இயற்றியதால் கம்பராமாயணம் என்னும் பெயர் பெற்றது.
2. பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்றும் ஆறு காண்டங்கள் உள்ளன.
3. பெரும்பிரிவு காண்டம் என்றும் சிறுபிரிவு படலம் என்றும் குறிக்கப்படுகிறது.
4. கம்பர் தம் நூலுக்கு இட்ட பெயர் இராமாவதாரம் என்பதாகும்.

**9.** சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறியதென்ன ?

1. இராமனைப் பார்த்தமம குகன், மனம் வருந்தி ‘‘உன்னை இக்கோலத்தில் காணும் என் கண்களைப் பறித்தெடுக்காத கள்வன்’’ நான், ‘‘உன்னோடு இங்கேயே தங்கியிருப்பேன் என்றான்.
2. அப்போது இராமன் சீதையையும், இலக்குவனையும் பார்த்து, ‘‘இந்தக் குகன் நம்மிடத்து நீங்காத அன்புடையவன் என்று மனம் நெகிழ்ந்து கூறினான். குகனையும் தன்னோடு அன்றிரவு தங்குமாறு கூறினான்.

www.teachertn.blogspot.com

10. விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை ?

1. உள்ளத்து அன்பு முதிர்வினால் எழுந்த பற்றின் காரணமாகக் குகன் கொண்டு வந்த இவ்வுணவு (தேனும், மீனும்) அமுதத்தினை விடச் சிறந்தன.
2. இவை எத்தகையனவாய் இருப்பினும் தூய்மையானவையே.
3. எம்போன்றோர்க்கும் உரியன.
4. இனிமையான இவை நாங்கள் விரும்பி உண்டதற்குச் சமம்.

என்று இராமன் விருத்தமாதவரை நோக்கிக் கூறினான்.

**இயல்: 4**

11. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல் வழித் தொகுத்து எழுதுக.

1. நெல் அறுத்து நீங்கப் பெற்ற அழகிய இடமகன்ற வயல்களில் மீண்டும் விதைப்பதற்காகப் பனையோலைப் பெட்டிகளில் விதை நெல்லை எடுத்துச் செல்லும் உழவர் மகளிர், வீடு திரும்பும் போது தாம்பிடித்த மீன்களை அப்பெட்டியில் எடுத்து வரும் புதுவருவாயினை உடைய மருத நிலத் தலைவனே !
2. அரசராலே மாராயம் பெறுதலும், குதிரை, தேர், யானை முதலியவற்றைச் செலுத்துதலும் உண்மையில் செல்வம் ஆகமாட்டா. அவை முற்பிறப்பில் அவர் செய்த நல்வினையின் பயனே.
3. சான்றோர்கள் செல்வம் என்று கூறுவது ஒருவர் தம்மிடம் அடைக்கலமானவரின் துன்பத்தை விலக்கிக் காப்பதே ஆகும்.
4. உம்மிடம் அடைக்கலமான இவளை, நீ கைவிட்டதாலே அடைக்கலம் காக்கும் இயல்பு நின்பால் இல்லையோ ? எனத் தோழி தலைமகனிடம் வினவினாள்.

12. கண்ணகனார் – குறிப்பு எழுதுக

1. கண்ணகனார் சங்ககாலப் புலவர்.
2. கோப்பெருஞ்சோழனின் அவைக்களப் புலவராக விளங்கியவர்.
3. கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த பொழுது பிசிராந்தையாரின் வருகைக்காகக் காத்திருந்தான்.
4. அப்போது எம்மன்னனுடன் கண்ணகனாரும் இருந்தார்.
5. அம்மன்னன் உயிர் துறந்த பொழுது மிகவும் வருந்திப் ''பொன்னும் மணியும்'' எனத் தொடங்கும் பாடலைப் பாடினார்.

13. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை ?

பொன்னும் பவளமும் முத்தும் மாணிக்கமும் தோன்றும் இடங்கள் ஒன்றுக்கொன்று தொலைவில் இருப்பினும் மாலையாகக் கோத்து அருமையான அணிகலன் அமைக்கும் போது தம்முள் ஒருங்கே சேர்வது போல என்றும் சான்றோர் சான்றோர் பக்கமே இருப்பர்.

**இயல்: 6**

14. வயலின் வரப்புகளாகக் கூறப்படுபவை யாவை ?

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களும் வயலின் வரப்புகளாகும்.

15. வயல் தரும் விளைவுகள் யாவை ?

பால், முந்திரி, வாழை, கரும்பு, இளநீர் முதலியன வயல் தரும் விளைவுகள் ஆகும். மேலும், அறம், பொருள், இன்பம், வீடு என்பன விளைபொருள்களாகும்.

16. போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர் ?

1. போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் அதிவீரராம பாண்டியன்.
2. போலிப் புலவர்களின் செவியை அறுப்பவர் வில்லிப்புத்தூரார்
3. போலிப் புலவர்களின் தலையை வெட்டுபவர் ஒட்டக்கூத்தர்.

**இயல்: 7**

17. பெரியாரது இலக்கணம் யாது ?

1. அறநெறியை அறிந்து அறிவில் தெளிந்த முதிர்ச்சியுடையோராய் தம் அரசனுக்கு வரும் நன்மை, தீமை இவற்றை முன்னமேயே அறிந்து சொல்லும் ஆற்றலுடையவரே பெரியார் ஆவர்.
2. தம்மைச் சார்ந்து நிற்பவர்க்கு வந்த துன்பங்களை நீக்கி, அத்தகைய துன்பங்கள் மீண்டும் வராதபடி காப்பவரே பெரியார் எனப்படுவர்.

18. பெரியாரைத் துணைக் கொள்வதன் சிறப்பு யாது ?

1. பெரியாரை அவர் விரும்புவனவற்றைச் செய்து அவரைத் தம்முடையவராக ஆக்கிக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் அதுவே அரசர்க்குரிய செல்வங்களுள் எல்லாம் கிடைத்தற்கரிய செல்வமாகும்.
2. தம்மைக் காட்டிலும் அறிவில் சிறந்த பெரியோரை உறவினராய் ஏற்று நடத்தலே வலிமைகளுள் எல்லாம் சிறந்ததாம்.

3. தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞர்களையே உலகம் கண்ணாகக் கொண்டு நடத்தலால், மன்னனும் அத்தகையோரை ஆராய்ந்து நட்பாக்கிக் கொள்ள வேண்டும்.

19. பெரியாரைத் துணைக் கொள்ளாமையால் வரும் குற்றம் யாது ?

1. குற்றம் கண்ட இடத்து இடித்துத் திருத்தும் பெரியாரின் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளாத அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர்கள் இல்லை எனினும் தானே கெட்டழிவான்.
2. முதலீடு இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் ஒன்றுமில்லை அதுபோல், தம்மைத் தாங்கிக் காப்பாற்றும் பெரியோர் துணையில்லாதவர்க்கு நிலைத்த தன்மை இல்லை.
3. நல்லவர் ஒருவரின் நட்பைக் கைவிடுவது பலரைப் பகைத்துக் கொள்வதை விடப் பன்மடங்கு தீமை உடையதாகும்.

20. பொருளினது சிறப்பு யாது ?

1. ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிக்க வைப்பது பொருட்செல்வமேயன்றி வேறு பொருள் இல்லை.
2. பொருளில்லாத வறியவரை எல்லாரும் இகழ்ந்து பேசுவர். பொருட்செல்வம் உடையவரை எல்லாரும் புகழ்ந்து பேசுவர்.
3. பொருள் என்னும் அணையா விளக்கு ஒருவரிடத்திருந்தால், அது அவருடைய பகை இருக்கும் இடமெல்லாம் சென்று பகையாகிய இருளைப் போக்கும்.

இவையே பொருளினது சிறப்பாகும்.

21. பொருளீட்டும் நெறியினைத் திருவள்ளுவர் எங்ஙனம் கூறுகிறார் ?

1. பிறருக்குத் தீங்கின்றி நல்வழியில் ஈட்டிய பொருள் அறத்தையும் இன்பத்தையும் தரும்.
2. அருளும் அன்பும் பொருந்தாமல் பிறவழியில் வரும் செல்வத்தை ஏற்காமல் விலக்க வேண்டும்.
3. அரசுரிமையில் வந்த பொருளும், மக்கள் வரியாகத் தரும் பொருளும், பகைவரை வென்று கொண்ட திறைப்பொருளும் அரசனுக்குரிய பொருள்களாகும்.

www.teachertn.blogspot.com

22. பொருளீட்டுவதால் ஏற்படும் பயன்கள் யாவை ?

1. அன்பு என்னும் தாய் பெற்ற அருள் என்னும் குழந்தை, பொருள் என்னும் வளர்ப்புத் தாயால் பேணப்படும்.
2. தன் கைப்பொருள் கொண்டு ஒருவன் செய்யும் செயலானது குன்றின் மேல் இருந்து கொண்டு யானைப் போரைக் காண்பதற்கு ஒப்பானது.
3. பகைவரின் செருக்கினை அறுக்கும் கூர்மையான படைக்கலம் பொருள் தான். அதைத் தேடிச் சேர்த்தல் வேண்டும்.
4. சிறந்த பொருளை நல்வழியில் மிகுதியாக ஈட்டியவர்க்கு, மற்றைய அறனும் இன்பமும் ஆகிய இரண்டும் எளிமையாகக் கிடைக்கும்.

23. இறைவன் திருவடியை வணங்குகின்றவர் எத்தன்மையர் ?

1. இறைவன் திருவடியை வணங்குகின்றவர் எவருக்கும் அடிமையாகார்; எமனுக்கும் அஞ்சமாட்டார்.
2. நரகம் சென்று துன்பப்பட மாட்டார்; மரணம் அடையார்.
3. இறைவனின் பாதுகாப்பில் இருப்பார்; நோய்களை அறியார்.
4. யார் மாட்டும் எதற்காகவும் பணிந்து ஒழுகமாட்டார். அவர்களுக்கு எந்நாளும் இன்பமின்றித் துன்பம் இல்லை.

**இயல்: 9**

24. நந்திவர்மன் பெருமைகளாக நந்திக்கலம்பகம் கூறுவன யாவை ?

1. மேகங்கள் சொரிகின்ற மணிகளையும் மூங்கில்கள் தருகின்ற முத்துக்களையும் ஊர்தோறும் கொடுத்து
2. அவ்வூர்களில் விளையும் நெற்கதிரைக் கொண்டு வருகின்ற காவிரியின் வளம் பொருந்திய நாட்டையுடையவனே !
3. செல்வ வளமும், நிலவளமும் உடையவனே !
4. அறிவில்லா அரசர் உன்னை வணங்காமையால் கொல்லப்பட்டு வானுலகம் அடைவர்.

25. குலசேகர ஆழ்வார் திருவித்துவக் கோட்டு இறைவனிடம் வேண்டுவது யாது ?

மீன்கள் நீந்துகின்ற வயல்கள் நிறைந்துள்ள வித்துவக் கோட்டு பெருமானே ! நீ எனக்கு அருள் புரியவில்லையாயினும் உன்னையே அடைக்கலமாகப் புகுவேன். செங்கோன்மையின்றி ஆட்சி புரியினும் அவனுடைய ஆட்சியையே எதிர்நோக்கி வாழும் குடிமக்களைப் போல் நான் இருக்கின்றேன் என்கிறார் குலசேகர ஆழ்வார்.

www.teachertn.blogspot.com

**இயல்: 10**

**26.** நிற்க நேரமில்லை என்ற பாடல் மூலம் சாலை இளந்திரையன் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

1. வழித்தடம் குப்பை கூளங்களால் அடைபடும் முன்னே விரைந்து நடப்பாயாக.
2. மலைப்பகுதியைக் கடக்க கால்களும், புதரை அறுக்க கைகளும் உண்டு.
3. கண்களும், காதுகளும் துணையாய்க் கொண்டு மன உறுதியுடன் செயல்பட்டால் விண்ணிலும் வழி காணலாம்.
4. பணியை முடித்து ஓய்வு பெறுக. இனிக்கும் செய்திகள் உன் மனத்தில் குவியும்.
5. செடியின் வெற்றி பூவில் உள்ளதைப் போல் உன் வெற்றிகளால் துன்பங்கள் யாவும் ஓடிவிடும்.

**ஐந்து மதிப்பெண் வினாக்கள் (செய்யுள்)**

**பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளிக்க**

1. தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியே என் முத்தமிழே – புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்.

<u>**வினாக்கள்**</u>

அ) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் யாது ?

ஆ) முத்தமிழ் – விரித்தெழுதுக.

இ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.

ஈ) உன்னோடுவந்துரைக்கும் – பிரித்தெழுதுக.

உ) விளம்பக் கேள் – பொருள் எழுதுக.

<u>**விடைகள்**</u>

அ) தமிழ்விடு தூது

ஆ) மூன்று + தமிழ். இயல், இசை, நாடகம்

இ) தி**<u>த்</u>**திக்குந், மு**<u>த்</u>**தி = த், உ**<u>ண்</u>**ண, வி**<u>ண்</u>**ணப்பம் = ண்

ஈ) உன்னோடு + உவந்து + உரைக்கும்

உ) சொல்லக் கேள்

www.teachertn.blogspot.com

2. அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்.

**வினாக்கள்**

அ) இப்பாடல் இடம் பெற்ற நூல் யாது ?
ஆ) இப்பாடலின் ஆசிரியர் யார் ?
இ அறிவெனப்படுவது யாது ?
ஈ) முறையெனப்படுவது யாது ?
உ) பொறை – பொருள் எழுதுக.

**விடைகள்**

அ) கலித்தொகை
ஆ) நல்லந்துவனார்.
இ) பேதையார் சொல் பொறுத்தல்
ஈ) ஒரு பக்கம் சாராமல் தண்டித்தல்.
உ) பொறுமை

3. மீன்நோக்கும் நீள்வயல் சூழ் வித்துவக்கோட் டம்மாஎன
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்
தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே.
– இப்பாடலின் மையக் கருத்தை எழுதுக.

**மையக்கருத்து**

மீன் நீந்தும் வயல்கள் சூழ்ந்த வித்துவக்கோட்டில் உள்ள பெருமானே! நீ எனக்கு அருள் புரியவில்லை என்றாலும் எனக்கு வேறு ஒரு பற்றில்லை. மன்னவன் ஒருவன் செங்கோல் முறை தவறித் துன்புறுத்தினாலும் அவனுடைய ஆட்சியையே எதிர்நோக்கி வாழ்கின்ற குடிமக்களைப் போல, நான் உன் திருவடிகளையே எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

www.teachertn.blogspot.com

4. பதிதொறு புயல்பொழி தருமணி பணைதரு
பருமணி பகராநெற்
கதிர்தொகு வருபுனல் கரைபொரு திழிதரு
காவிரி வளநாடா
நிதிதரு கவிகையும் நிலமகள் உரிமையும்
இவையிவை யுடை நந்தி
மதியிலி அரசர்நின் மலரடி பணிகிலர்
வானகம் ஆள்வாரே.

– இப்பாடலின் மையக்கருத்தை எழுதுக.

**மையக்கருத்து**

ஊர்தோறும் மேகங்கள் சொரிகின்ற மணிகளையும், மூங்கில்கள் தந்த பெரிய முத்துக்களையும் கொடுத்து அவ்வூர்களில் உள்ள நெற்கதிரைத் தொகுத்துக் கொண்டு வருகின்ற நீர், கரையோடு மோதிவழியும் காவிரியின் வளம் பொருந்திய நாட்டையுடையவனே! செல்வத்தைத் தருகின்ற குடையும், பூமிதேவியின் உரிமையும் ஆகிய இவற்றையுடைய நந்தி மன்னனே! அறிவில்லாதவரான அரசர் உன்னுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்காதவராகித் தேவர் உலகத்தை ஆள்பவராவர்.

## உ) உரைநடை – சிறுவினாக்கள் (4 மதிப்பெண்கள்)

**இயல்: 2**

1. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?

“ஆண்கள் பெண்களைப் படிக்க வேக்க வேண்டும். அவர்களுக்கு உலகப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்க வேண்டும். நாட்டிலுள்ள கேடுகளில் எல்லாம் பெருங்கேடு பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமை; இவ்விழி நிலை ஒழிக்கப்பட வேண்டும்” என்று பெண் கல்வி குறித்துப் பெரியார் கூறுகிறார்.

2. பெண்ணுரிமையை விளக்குக.

பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார். அதற்காக அவர், அவர்களை ஆயத்தப்படுத்தும் முறையே தனியானது. ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று சிந்தித்தவர் பெரியார். அவர், பெண்கள் தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இராமல், மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ்பெற்ற பெண்மணிகளாக வேண்டும் என்று பெரியார் வலியுறுத்தினார்.

**3.** மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை ?

தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் ஒன்று உண்டு. அதுவே மணக்கொடை. பெற்றோர் பலர், தம் மகனின் கல்விக்காகச் செலவழித்த பணத்தை வட்டியுடன் சேர்த்தே அவர் வரப்போகின்ற மனைவி மூலம் மணக்கொடையாய்ப் பெற்று விட வேண்டுமென்று துடிக்கின்றனர். சமுதாயத்தில் முறையான ஒழுக்கமும், அன்பும், தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால் தான், இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும். தாமே பாடுபட்டு உழைத்து முன்னேற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம் நம் இளைஞர்களிடையே வளர வேண்டும் என்று பெரியார் முழங்குகிறார்.

**இயல்: 4**

**4.** பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும் ?

பேச்சின் தொடக்கம் நன்றாக இராவிட்டால் கேட்பவர்களுக்குப் பேச்சினைக் குறித்த நல்லெண்ணம் தோன்றாது. தட்டுத் தடங்கலின்றிப் பேசுவதற்குத் தொடக்கமே அடித்தளமாகும். கேட்போரை வயப்படுத்தும் முறையில் பேச்சைத் தொடங்குதல் வேண்டும். அவையோர் தம் உள்ளங்ளைக் கேட்பதற்குரிய பக்குவத்தில் வைத்திருக்க வேண்டும். அவையில் இருப்போரை விளித்துச் சுருக்கமான முன்னுரையுடன் பேசத் தொடங்குவது சிறப்புடையது. பேசத் தொடங்கிய ஓரிரு மணித்துளிகளில் பேசப்போகும் பொருளில் புகுந்து விளையாடுவது பாராட்டுக்குரியது; இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்பத் தொடக்கவுரை அமைதல் நன்று.

**5.** பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.

பேச்சை முடிக்கும் போது தான், பேச்சாளர் தமது கருத்தை வற்புறுத்தவும் கேட்பார் மனத்தில் பதியுமாறு சுருக்கிக் கூறவும் கூடும்.

பேச்சின் சுருக்கத்தைக் கூறி முடித்தல், உணர்ச்சியைத் தூண்டும் முறையில் முடித்தல், பாராட்டி முடித்தல், பொருத்தமான கவிதையைக் கூறி முடித்தல் என முடிக்கும் முறைகள் உள்ளன. சிறந்த பேச்சாளர் எப்படி முடித்தாலும் அழகுறவே அமையும்.

**6.** மேடைப் பேச்சின் திறம் குறித்துக் குறள் கூறும் செய்திகள் யாவை ?

சொல்லக் கருதும் செய்தியைச் சுவையுடன் சொல்ல வேண்டும்; நிரல் படச் சொல்ல வேண்டும்; திறம்படச் சொல்ல வேண்டும்; தெளிவாகவும் சொல்ல வேண்டும்; தான் சொல்லிய சொல்லை விட மேலானது வேறு ஒரு சொல் இல்லாதவாறு பேச வேண்டும்.

www.teachertn.blogspot.com

**இயல்: 6**

7. கடல் வாணிகம் குறித்து எழுதுக.

பொன்னும், மணியும் முத்தும் துகிலும் கொண்டு கடல் கடந்து தமிழர் வாணிகம் செய்து சிறந்திருந்தனர். பண்டைத் தமிழகத்தில் துறைமுகப் பட்டினங்கள் பலவிருந்தன. பூம்புகாரில் பெருவணிகர்கள் வாழ்ந்தனர். கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும், மயில் தோகையும், சந்தனமும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. கி.மு. பத்தாம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில் தோகையும் வாசனைப் பொருள்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. தமிழர்களுக்குச் சாவக நாட்டுடனும் கடல் வணிகத் தொடர்பு இருந்தது.

8. உழவுத் தொழில் குறித்து எழுதுக.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'' என்று திருக்குறள் கூறுவது போல உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர். தமிழர், பயிர் செய்து உலகைக் காக்கும் இத்தொழிலைப் பெரிதும் போற்றினர். ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்ற புகழ்மொழி இன்றும் போற்றப்படுகிறது. உழவுக்குச் சிறப்புப் பெற்ற மருத நிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப்பட்டு இருந்தது. மருத நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் தமிழர்.

**இயல்: 8**

9. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது ? விளக்குக.

காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் ''அரிச்சந்திரன்''. உண்மை மட்டுமே பேசும் அரசன் அரிச்சந்திரனை ஒரு பொய் பேச வைக்க வேண்டும் என்பதற்காகவே பல இன்னல்களைத் தருகிறார் முனிவர் விசுவாமித்திரர். அதனால், அரிச்சந்திரன் நாடு, மனைவி, மகனை இழந்து சுடுகாட்டில் பணிபுரிகிறார். முனிவர் பல்வேறு இன்னல்களைத் தந்தும், ''பொய் சொல்லேன்'' என்று மறுமொழி கூறினான். அவனது வாய்மையை உணர்ந்த காந்தியடிகளுக்கு ''அரிச்சந்திரன்'' நாடகம் பிடித்த நாடகமானது.

10. மனித நேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?

மனிதரோடு மனிதராக வாழ்ந்து, மனிதருக்காக வாழ்ந்து, ''மகாத்மா''வாக உயர முடியும் என்பதை மெய்ப்பித்தவர் உலக உத்தமர் காந்தியடிகள். ''என்னைப் பொருத்தவரை தேசாபிமானமும் மனிதாபிமானமும் ஒன்று தான். நான் ஒரு தேசபக்தன் அதற்கு அடிப்படைக் காரணம் நான் மனிதனாக இருப்பதும், அதற்கு மேல் மனிதாபிமானியாக இருப்பதும் தான்'' என்று காந்தியடிகள் கூறுகிறார்.

www.teachertn.blogspot.com

11. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?

மனிதனின் நோக்கம் உயர்ந்ததாயும் தூய்மையானதாயும் இருந்தால் மட்டும் போதாது. அதை அடையும் வழிமுறைகளும் தூய்மையானவையாய்; பிறருக்குத் துன்பம் தராதனவாய் இருக்க வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார்.

நெருப்பை நெருப்பால் அணைக்க முடியாது; நெருப்பை நீரால்தான் அணைக்க முடியும். வன்முறையை அன்பு, அருள் ஆகிய அறவழிகளில் தான் தடுக்க முடியும். அறவழியைப் பின்பற்றிப் பெறுகிற விடுதலையே நிலைக்கும் என்று அவர் எடுத்துக் கூறினார்.

## பகுதி – இ

## உரைநடை (5 மதிப்பெண்)

**இயல்: 8**

அ. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

அரிச்சந்திரன் நாடகத்தை காந்தி ஒரு முறை பார்த்தார். உண்மையை மட்டுமே பேசும் அரசன் அரிச்சந்திரனை ஒரு பொய் பேச வைக்க வேண்டும் என்பதற்காகவே பல இன்னல்களைத் தருகிறார் முனிவர் விசுவாமித்திரர். அதனால் அரிச்சந்திரன் நாட்டையும், மனைவியையும், ஒரே மகனையும் இழக்கிறான். சுடுகாட்டில் பணிபுரிகிறான். முனிவர் பல்வே இன்னல்களைத் தந்தும், "பொய் சொல்லேன்" என்று மறுமொழி கூறினான். அவனது வாய்மையை நாடகத்தின் வாயிலாக அறிந்த காந்தி தாம் ஒரு சத்தியவானாக இருக்க வேண்டும் என்று உறுதி கொண்டார்.

வினாக்கள்:

1. காந்தி பார்த்த நாடகம் எது ?
2. உண்மையை மட்டுமே பேசும் அரசன் யார் ?
3. எதற்காக அரிச்சந்திரனுக்குப் பல இன்னல்களைத் தருகிறார் முனிவர் விசுவாமித்திரர் ?
4. பொய் பேசாததால் அரிச்சந்திரன் இழந்தவற்றைக் கூறுக.
5. அரிச்சந்திரன் நாடகம் வாயிலாக காந்தி எடுத்துக் கொண்ட உறுதி யாது ?

விடைகள்

1. அரிச்சந்திரன் நாடகம்
2. அரிச்சந்திரன்

www.teachertn.blogspot.com

3. ஒரு பொய் பேச வைக்க வேண்டும் என்பதற்காகவே அரிச்சந்திரனுக்குப் பல இன்னல்களைத் தருகிறார் முனிவர் விசுவாமித்திரர்.
4. அரிச்சந்திரன் நாட்டையும், மனைவியையும், ஒரே மகனையும் இழந்தான்.
5. தாம் ஒரு சத்தியவானாக இருக்க வேண்டும் என்று காந்தி உறுதி கொண்டார்.

2. மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் முதலியவை தொழிற்கல்வித் துறைகள். மேனிலைக் கல்வியில் உயர்மதிப்பெண் பெற்றோர் அந்தந்தப் பாடப்பிரிவின் தகுதிக்கேற்ப விண்ணப்பிக்கலாம். இவர்கள் கலந்தாய்வு மூலம் தேர்வு செய்யப்பட்டுக் கல்லூரிகளில் சேர்ந்து உரிய காலத்தில் படித்து முடிப்பர். படித்து முடித்தவர்கள் அவரவர் தகுதிக்கேற்ப உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பணிபுரியும் வாய்ப்புண்டு.

தற்போது உயிரி – தொழில் நுட்பத்துறை, நுண்ணியல் தொழில் நுட்பத்துறை சார்ந்த தொழிற் படிப்புகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. வேதியியல், விலங்கியல் துறைகளில் இளங்கலைப் பட்டம் பெற்றவர்களுக்கும், சுற்றுச்சூழல், வேளாண்மை, மருத்துவம் முதலிய துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கும் சிறந்த வேலைவாய்ப்புத் துறையாகத் தற்போது இது விளங்கி வருகிறது.

வினாக்கள்

1. தொழிற்கல்வித் துறைகள் யாவை ?
2. தொழிற்கல்வி கல்லூரிகளில் எவ்வகையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர் ?
3. தொழிற்கல்வி படித்து முடித்தவர்களுக்கு எங்கெங்கு பணிபுரியும் வாய்ப்புண்டு ?
4. தற்போது கற்பிக்கப்பட்டு வரும் தொழிற்படிப்புகள் யாவை ?
5. இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

விடைகள்

1. மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம்
2. கலந்தாய்வு மூலம்
3. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும்
4. உயிரி – தொழில்நுட்பத் துறை, நுண்ணியல் தொழில்நுட்பத் துறை
5. தொழிற்கல்வி.

www.teachertn.blogspot.com

**பகுதி – இ**

**உரைநடை (5 மதிப்பெண்)**

**இயல்: 10**

அ. கீழ்க்காணும் பகுதியைப் படித்துக் குறிப்புகளை எழுதுக.

மேனிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றோர் இளங்கலைப் பட்டமும் அதன் பின்னர் முதுகலைப் பட்டமும் பெறலாம். பட்டம் பெறுவோர், கல்வியியல் கல்லூரியில் சேர்ந்து இளநிலைக் கல்வியியல் பட்டம் பெற்று ஆசிரியர் பணியைப் பெறலாம்.

தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்குத் தமிழக அரசுப் பணிகளில் இருபது விழுக்காடு ஒதுக்கித் தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது. பட்டம் பெற்றவர்கள் தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம், நடுவணரசுத் தேர்வாணையம், வங்கித் துறை, ஆயுள் காப்பீட்டுத்துறை, தொடர்வண்டித்துறை முதலிய துறைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றுப் பல்வேறு வேலைவாய்ப்புகளைப் பெறலாம். இதற்கான தகவல்களை நாளேடு, வானொலி, தொலைக்காட்சி முதலிய ஊடகங்களின் மூலம் பெற்று முறைப்படி விண்ணப்பிக்க வேண்டும். மாவட்ட வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்தும் வேலைவாய்ப்புகளைப் பெறலாம்.

**விடை:**

மேனிலைக் கல்வியில் தேர்ச்சி – இளங்கலைப் பட்டம் – முதுகலைப் பட்டம் – கல்வியியல் பட்டம் – ஆசிரியர் பணி. தமிழ் வழிக் கல்வி – தமிழக அரசுப் பணி – இருபது விழுக்காடு – பட்டம் – தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம், நடுவணரசுத் தேர்வாணையம், வங்கித்துறை, ஆயுள் காப்பீட்டுத்துறை, தொடர்வண்டித்துறை – போட்டித் தேர்வு – வேலை வாய்ப்பு – தகவல்கள் – நாளேடு, வானொலி, தொலைக்காட்சி – விண்ணப்பித்தல் – மாவட்ட வேலைவாய்ப்பகம் – பதிவு – வேலை வாய்ப்புகளைப் பெறலாம்.

2. போராட்ட முறைகள் இருவகைப்படும். ஒன்று போர்முறையில் உரிமையை நிலைநாட்டுவது; மற்றொன்று அறவழியில் உரிமைப்போர் செய்து வெற்றி பெறுவது. இவற்றுள் அறப்போர் முறையினைக் காந்தியடிகள் தேர்ந்தெடுத்தார்.

காந்தியடிகள் தமிழ்நாட்டுக்கு வந்த போது, ஏழை உழவர்கள் வறுமையால் அரையாடை உடுத்தியதைக் கண்டார். தாமும் அன்று முதல் மேலாடை அணிவதை நிறுத்திக் கொண்டார். அரையாடையுடன் இங்கிலாந்தில் நடந்த வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற போது, அப்போதைய இங்கிலாந்து முதன்மையமைச்சர் சர்ச்சில் அரை நிர்வாணப் பக்கிரி என்று ஏளனம் செய்த போதும், காந்தியடிகளின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

www.teachertn.blogspot.com

**விடை:**

போராட்ட முறை – இருவகை – போர் முறை – அறவழி – அறப்போர் – காந்தியடிகள் தேர்ந்தெடுத்தார். காந்தியடிகள் தமிழ்நாடு – ஏழை உழவர்கள் – அரையாடை – தாமும் மேலாடை அணிவதை நிறுத்தல் – இங்கிலாந்து – வட்டமேசை மாநாடு – இங்கிலாந்து முதன்மையமைச்சர் சர்ச்சில் அரை நிர்வாணப் பக்கிரி – ஏளனம் – காந்தியடிகள் – புன்னகை தவழ்ந்தது.

## <u>செய்யுள் – நெடுவினா</u>

**இயல்: 2**

1. தேரா ''மன்னா'' என விளித்துக் கண்ணகி கூறியன யாவை ?

கண்ணகி மன்னனை நோக்கி, ''ஆராய்ந்து அறிந்து நீதி வழங்காத மன்னனே! உன்னிடம் கூறுவது ஒன்றுண்டு'' என உரைக்கத் தொடங்கினாள்.

''புறாவின் துன்பத்தைப் போக்கிய சிபி மன்னனும், தன் அரண்மனை மணி ஒலித்ததைக் கேட்டு பசுவின் துயரை அறிந்து, தன் ஒப்பற்ற மகனையே தேர்ச் சக்கரத்திலிட்டுக் கொன்ற மனு நீதிச் சோழனும் வாழ்ந்த பெரும்புகழுடைய புகார் நகரமே யான் பிறந்த ஊர். அப்புகார் நகரில் பழியில்லாத சிறப்பினையுடைய புகழ்மிக்க குடியில் தோன்றிய மாசாத்துவான் மகனை மணம் புரிந்தேன். வீரக்கழலணிந்த மன்னனே! ஊழ்வினைப் பயனால், வாழ்வதற்காக நின் மதுரை நகரத்துக்கு வந்து, என் காற்சிலம்பினை விற்க முயன்று, உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி நான், கண்ணகி என்பது என் பெயர் என்று கூறினாள்.

**இயல்: 7**

**2.** பெரியாரைத் துணையாகக் கொள்வதன் இலக்கணம், அதனால் வரும் சிறப்பு, பெரியார் துணையில்லாத வழி ஏற்படும் இழிவு ஆகியன குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**பெரியாரைத் துணையாகக் கொள்வதன் இலக்கணம்**

1. அறநெறியை அறிந்து அறிவில் தெளிந்த முதிர்ச்சி உடையோர் நட்பினை ஆராய்ந்தறிந்து ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
2. தமக்கு வந்துள்ள துன்பத்தைப் போக்கி இனி, மேலும் துன்பம் வராதவாறு முன்னதாகவே காக்கும் தன்மையுடையாரைப் போற்றி நட்பாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

www.teachertn.blogspot.com

**பெரியாரைத் துணைக் கொள்வதன் சிறப்பு**

1. அறிவறிந்த பெரியோரைப் போற்றி உறவாகக் கொள்ளுதலே, ஒருவர் பெற வேண்டிய அரிய பேறுகளுள் எல்லாம் அரிய பேறாகும்.
2. தம்மைக் காட்டிலும் அறிவில் சிறந்த பெரியோரை உறவினராய் ஏற்று நடத்தலே வலிமைகளுள் எல்லாம் சிறந்ததாம்.
3. தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞர்களையே உலகம் கண்ணாகக் கொண்டு நடத்தலால், மன்னனும் அத்தகையோரை ஆராய்ந்து நட்பாக்கிக் கொள்ள வேண்டும்.

**பெரியோரைத் துணைக் கொள்வதன் பயன்**

1. அறிவிற் சிறந்த பெரியோரைச் சார்ந்து நடக்க வல்லாருக்குப் பகைவர் செய்யக்கூடிய தீங்கு யாதொன்றும் இல்லை.
2. தீயனவற்றைக் கண்டால் இடித்துத் திருத்தும் பெரியோரைத் துணையாகக் கொண்டு வாழ்பவரைக் கெடுக்கும் வலிமையுடையவர் எவருமிலர்.

**பெரியார் துணையல்லாத வழி ஏற்படும் இழிவு**

1. குற்றம் கண்ட இடத்து இடித்துத் திருத்தும் பெரியாரின் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளாத அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர்கள் இல்லை எனினும் தானே கெட்டழிவான்.
2. முதலீடு இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் ஒன்றுமில்லை. அதுபோல், தம்மைத் தாங்கிக் காப்பாற்றும் பெரியோர் துணையில்லாதவர்க்கு நிலைத்த தன்மை இல்லை.
3. நல்லவர் ஒருவரின் நட்பைக் கைவிடுவது, பலரைப் பகைத்துக் கொள்வதைவிடப் பன்மடங்கு தீமை உடையதாகும்.

**3.** பொருளினது சிறப்பு, பொருளீட்டும் நெறி, பொருளீட்டுவதால் ஏற்படும் பயன்கள் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

பொருளினது சிறப்பு

1. ஒரு பொருட்டாக மதிக்கத்தகாதவரையும் பிறர் மதிக்குமாறு செய்வதில் பொருளுக்கு இணையானது வேறொன்றுமில்லை.
2. செல்வம் அற்றவரை எல்லாரும் இகழ்வர்; செல்வரை எல்லாரும் சிறப்பிப்பர்.
3. செல்வம் என்னும் அணையா விளக்கு அதனை உடையவர் நினைத்த இடங்களுக்கெல்லாம் சென்று பகைமை என்னும் இருளைப் போக்கும்.

www.teachertn.blogspot.com

**பொருளீட்டும் நெறி**

1. பிறருக்குத் தீங்கின்றி நல்வழியில் ஈட்டியபொருள், அறத்தையும், இன்பத்தையும் தரும்.
2. அருளும் அன்பும் பொருந்தாமல் பிறவழியில் வரும் செல்வத்தைப் பற்றாமல் நீக்குதல் வேண்டும்.
3. அரசுரிமையால் வந்த பொருளும், மக்கள் வரியாகத் தரும் பொருளும், பகைவரை வென்று கொண்ட திறைப்பொருளும் அரசனுக்குரிய பொருள்களாம்.

**பொருளீட்டுவதால் ஏற்படும் பயன்கள்**

1. அன்பு என்னும் தாய் பெற்ற அருள் என்னும் குழந்தை, பொருள் என்னும் வளர்ப்புத் தாயால் பேணப்படும்.
2. தன் கைப்பொருள் கொண்டு ஒருவன் செய்யும் செயலானது குன்றின் மேல் இருந்து கொண்டு யானைப் போரைக் காண்பதற்கு ஒப்பானது.
3. பொருளைத் தேடிச் சேர்த்தல் வேண்டும். அது பகைவரின் செறுக்கை அறுக்கும் உறுதியான படைக்கலம், அதனைவிடக் கூர்மையான கருவி வேறொன்றுமில்லை.
4. சிறந்த பொருளை நல்வழியில் மிகுதியாக ஈட்டியவர்க்கு, மற்றைய அறனும் இன்பமும் ஆகிய இரண்டும் ஒரு சேரக் கைகூடும் எளிய பொருள்களே.

<u>**உரைநடை – நெடுவினா**</u>

**இயல்: 1**

1. தமிழ், செம்மொழிக்குரிய பதினொரு தகுதிப் பாடுகளையும் பெற்றுள்ளது என்பதை நிறுவுக.

**செம்மொழித் தகுதிப்பாடுகள்**

1. தொன்மை
2. பிறமொழித் தாக்கமின்மை
3. தாய்மை
4. தனித்தன்மை
5. இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு
6. பொதுமைப் பண்பு
7. நடுவுநிலைமை
8. பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு
9. உயர்சிந்தனை
10. கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு
11. மொழிக் கோட்பாடு

**தொன்மை**

உலகம் தோன்றிய போதே தோன்றிய தமிழை அதன் தொன்மை கருதி ‘‘என்றுமுள தென்தமிழ்’’ என்பார் கம்பர்.

www.teachertn.blogspot.com

**பிறமொழித் தாக்கமின்மை**

தமிழ் ஒன்றே பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் இனிதின் இயங்கவல்லது. மிகுதியான வேர்ச்சொற்களைக் கொண்ட மொழி தமிழ்மொழி ஆகும்.

**தாய்மை**

தமிழ்மொழியானது திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம், பிராகுயி முதலிய மொழிகளுக்குத் தாய்மொழியாகத் திகழ்கிறது என்பார் கால்டுவெல்.

**தனித்தன்மை**

தமிழர் அகம், புறம் என்று வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர். தமிழ்மொழி இறவா இலக்கிய, இலக்கண வளம் கொண்டு தனக்கெனத் தனிநோக்கும் போக்கும் கொண்டுள்ளது.

**இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு**

உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள். இவ்விலக்கியங்கள் போல் உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்பது உலக இலக்கியங்களை ஆய்ந்த கமில் சுவலபில் என்னும் செக் நாட்டு மொழியியல் பேரறிஞரின் முடிவு. சங்க இலக்கியங்கள் மக்கள் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்தின. ஆதலால், சங்க இலக்கியங்களை மக்கள் இலக்கியம் எனலாம்.

தொல்காப்பியம், அகத்தியம் போன்ற இலக்கண நூல்கள் தோன்ற வேண்டுமென்றால் இதற்குக் குறைந்தது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாவது தமிழ்மொழி தோன்றிச் செம்மை நிலை அடைந்திருக்க வேண்டும். அத்தகைய இலக்கிய இலக்கண வளமுடையது தமிழ்மொழி.

**பொதுமைப் பண்பு**

தமிழர், தமக்கென வாழாது பிறர்க்குரியரை ஏற்றினர்; ஒன்றே குலம் எனப் போற்றினர்.

**நடுவுநிலைமை**

சங்க இலக்கியங்கள் இனம், மொழி, மதம் கடந்தவை; இயற்கையோடு இயைந்தவை; உலகத்தார் ஏற்கும் பொதுக் கருத்துகள் உடையவை; மக்கள் சிறப்புடன் வாழ ஏற்ற கருத்துகளை மொழிபவை.

www.teachertn.blogspot.com

**பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு**

சங்கப் படைப்புகள் மனிதப் பட்டறிவின் முழு வெளிப்பாடுகள். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், பிறன்மனை நோக்காப் பேராண்மை முதலிய பண்பாட்டு நெறிமுறைகளையும் தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

**உயர் சிந்தனை**

''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று புறநானூறும், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று திருக்குறளும் உரைப்பவை எல்லாம் தமிழ்மொழிக்கே உரிய விழுமிய சிந்தனைகள் ஆகும்.

**கலை, இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு**

தமிழ்ச் சான்றோர் மொழியை இயல், இசை, நாடகம் எனப் பிரித்து வளமடையச் செய்தனர். சிலப்பதிகாரம் கூறும் கலைநுட்பச் செய்திகள், சங்ககாலத் தமிழர்களின் கலை, இலக்கியத் தனித்தன்மைகளுக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

**மொழிக் கோட்பாடு**

தமிழ் ஐந்நூறு ஒலிகளைக் கொண்டுள்ளது. இதுவே உலக உணர்வுகளை எண்ணியவாறு வெளிப்படுத்தப் போதுமானது என்பர் மொழிநூலார். தமிழ்மொழி காலத்திற்கேற்ற புதுமையைப் பெறத் தக்க வல்லது; கணினிப் பயன்பாட்டிற்கும் ஏற்றது.

இவ்வாறு செம்மொழிக்கான பதினொரு கோட்பாடுகளும் முற்றிலும் பொருந்தும் ஒரே மொழி தமிழ்மொழி.

<u>**உரைநடை – நெடுவினா**</u>

**இயல்: 10**

**2.** தொழிற் கல்வி, தொழில் நுட்பக் கல்வி குறித்து விரிவாக எழுதுக.

**தொழிற்கல்வி**

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் முதலியவை தொழிற்கல்வித் துறைகள். மேனிலைக்கல்வியில் உயர்மதிப்பெண் பெற்றோர் அந்தந்தப் பாடப்பிரிவின் தகுதிக்கேற்ப விண்ணப்பிக்கலாம். இவர்கள் கலந்தாய்வு மூலம் தேர்வு செய்யப்பட்டுக் கல்லூரிகளில் சேர்ந்து உரிய காலத்தில் படித்து முடிப்பர். படித்து முடித்தவர்கள் அவரவர் தகுதிக்கேற்ப உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பணிபுரியும் வாய்ப்புண்டு.

www.teachertn.blogspot.com

தற்போது உயிரி – தொழில்நுட்பத்துறை, நுண்ணியல் தொழில் நுட்பத்துறை சார்ந்த, தொழிற் படிப்புகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. வேதியியல், விலங்கியல் துறைகளில் இளங்கலைப்பட்டம் பெற்றவர்களுக்கும், சுற்றுச்சூழல், வேளாண்மை, மருத்துவம் முதலிய துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கும் சிறந்த வேலைவாய்ப்புத் துறையாகத் தற்போது இது விளங்கி வருகிறது.

**தொழில் நுட்பக் கல்வி**

பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், தாம் பெற்ற உயர் மதிப்பெண்களுக்கேற்பப் பல தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்து பயிலலாம். பொறியியல் துறைகளில் உள்ளது போலப் பல்வேறு துறைகள் இதிலும் உண்டு. இதில் சேர்ந்து படிப்பவர்களுக்கும் இக்காலக் கட்டத்தில் வேலை வாய்ப்புகள் பெறுவதற்கு வாய்ப்புண்டு.

மேனிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள், இடைநிலையாசிரியர் கல்விப் பயிற்சி இரண்டாண்டுகள் படித்துத் தேர்ச்சி பெற்றால் இடைநிலையாசிரியராகப் பணியில் சேரலாம். மேலும் செவிலியர் பயிற்சி கூட்டுறவுப் பயிற்சி ஆகியவற்றில் சேர்ந்து பயிற்சி பெற்று வேலைவாய்ப்புகளைப் பெறலாம்.

**3.** கலை அறிவியல் கல்வி, சிறு தொழில் கல்வி குறித்து விவரிக்க.

**கலை அறிவியல் கல்வி**

மேனிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றோர் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல், பொருளியல், வரலாறு, கணக்குப்பதிவியல், கணிப்பொறியியல், வணிகவியல் முதலிய பிரிவுகளில் சேர்ந்து இளங்கலைப் பட்டமும் அதன் பின்னர் முதுகலைப் பட்டமும் பெறலாம். பட்டம் பெறுவோர், கல்வியியல் கல்லூரியில் சேர்ந்து இளநிலைக் கல்வியியல் பட்டம் பெற்று ஆசிரியர் பணியைப் பெறலாம்.

தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்குத் தமிழக அரசுப் பணிகளில் இருபது விழுக்காடு ஒதுக்கித் தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது. பட்டம் பெற்றவர்கள் தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம், நடுவணரசுத் தேர்வாணையம், வங்கித் துறை, ஆயுள் காப்பீட்டுத் துறை, தொடர்வண்டித் துறை முதலிய துறைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றுப் பல்வேறு வேலைவாய்ப்புகளைப் பெறலாம். இதற்கான தகவல்களை நாளேடு, வானொலி, தொலைக்காட்சி முதலிய ஊடகங்களின் மூலம் பெற்று முறைப்படி விண்ணப்பிக்க வேண்டும். மாவட்ட வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்தும் வேலைவாய்ப்புகளைப் பெறலாம்.

**சிறு தொழில் கல்வி**

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், பெறாதவர்கள் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து ஓராண்டு அல்லது ஈராண்டு பயிற்சி பெற்றுப் பணியில் சேரலாம். இத்தொழிற்பயிற்சி நிறுவனங்களில் கம்மியர், கடைசல் பிடிப்பவர், கட்டட வரைவாளர், நில அளவையாளர், தச்சர் படிப்புகளும் இயந்திரம், வாகனம், தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணிணி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன. அவரவர் விருப்பத்திற்கேற்பச் சேர்ந்து படித்து வேலை வாய்ப்புகளைப் பெறலாம்.

அரசுப் பணிக்காகக் காத்திராமல் அவரவர் சுயதொழில் தொடங்கிப் பலரும் வேலைவாய்ப்பைப் பெருக்க வேண்டும். அப்பொழுதுதான் வேலையில்லா நிலை மாறும். சுய தொழில் தொடங்குவதற்கு ‘‘வழிகாட்டுதல்கள், பயிற்சிகள் மற்றும் கடனுதவிகளை அரசு அளிக்கிறது. அவற்றைப் பெற்றுச் செயல்படுவதற்கான மனத்துணிவும் முயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் போதும், அத்தகையோர் நூற்றுக்கணக்கானோருக்கு வேலை அளிக்கலாம். அவர் வேலைக்காகக் காத்திருக்கவோ ஏங்கவோ தேவையில்லை.

**ஈ) மனப்பாடப் பகுதி – செய்யுள்**

தமிழ்ப் பாடநூலில் * உடுக்குறியிட்டுள்ள அனைத்துப் பாடல்களையும் (86 அடிகள்) எழுதிப் பார்க்கச் செய்தல் வேண்டும்.

www.teachertn.blogspot.com